## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.62/2018

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகேசன் (PW–1) | வயது | : | 40/2025 |
| த/க பெயர் | : | திரு.சிவலோகநாதன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | கூப்பாச்சி கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.01.0 ஏர்ஸ். தாவா சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் துளசியம்மாள் வாரிசுதாரர்களிடமிருந்து கிரயம் வாங்கினேன். பிரதிவாதிகளை எதற்காக தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் கம்பி வேலி அடைக்கும்போது பிரதிவாதிகள் தடை செய்ததால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், போலிசார் வாங்க மறுத்துவிட்டார்கள். அந்த புகார் மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. அந்த பிரச்சனை சம்பந்தமாக வேறு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.
2) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்வதால் தாவா சொத்து எனக்கு சொந்தம் என்றும், பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் ஆசாரி சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்குரையில்

சொல்லியுள்ள விபரம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள குணசேகரன், வீரப்பன், இந்திரஜித் ஆகியோர் யார் என்றால் தாவா சொத்தில் பக்கத்தில் குடியிருப்பவர்கள் , அதில் வீரப்பன் , இந்திரஜித் இறந்துவிட்டார்கள், குணசேகரன் உயிருடன் உள்ளார்.

**பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.08 10:14:42 +0530

District Munsif
Mannargudi.